# ‘அனைவருக்கும் கண்ணொளி’ (Sight For All) ‘பாலியல்-ரீதிச் சுரண்டல், துஷ்ப்பிரயோகம் மற்றும் தொல்லையளிப்பு தடுப்புக் கொள்கைகள்’ (Prevention of Sexual Exploitation, Abuse and Harassment (PSEAH) Policy) குறித்த தகவல் ஏடு

எவ்வொரு விதத்திலுமான பாலியல்-ரீதிச் சுரண்டல், துஷ்ப்பிரயோகம் மற்றும் தொல்லையளிப்பு ஆகியவற்றை ‘அனைவருக்கும் கண்ணொளி’ சேவை சகிக்காது. இந்த அமைப்புடன் ஈடுபாடு கொள்வதற்கான ஒரு நிபந்தனையாக ‘அனைவருக்கும் கண்ணொளி’ அமைப்பின் அனைத்து பிரதிநிதிகளும் நடந்துகொள்ளும் விதம், நன்னெறிகள் மற்றும் கண்ணியம் ஆகியவற்றில் இயலுமான வரை அதியுயர் தர நிலைகளை அவர்கள் கடைப்பிடிக்கவேண்டுமென்பது எமது எதிர்பார்ப்பாகும். ஆபத்திலிருந்து தப்பியவர்களை மையமாகக் கொண்டதொரு அணுகுமுறையை ‘அனைவருக்கும் கண்ணொளி’ சேவை பின்பற்றுகிறது, அத்துடன் பாலியல்-ரீதிச் சுரண்டல், துஷ்ப்பிரயோகம் மற்றும் தொல்லையளிப்பு ஆகியவற்றைத் தடுப்பதில் தீவிரமானதொரு பங்கினை அது வகிக்கிறது. ‘பாலியல்-ரீதிச் சுரண்டல், துஷ்ப்பிரயோகம் மற்றும் தொல்லையளிப்பு’ (Sexual Exploitationl Exploitation, Abuse and Harassment (PSEAH)) குறித்த ‘அனைவருக்கும் கண்ணொளி’ சேவையின் கொள்கைத் திட்டமானது பாலியல் சுரண்டல், துஷ்ப்பிரயோகம் மற்றும் தொல்லையளிப்பு ஆகியவற்றைத் தடுப்பதற்காக இடம் நிறுத்தப்பட்டுள்ள நடைமுறைகளையும், அமைப்பின் பொறுப்புடைமையை மேம்படுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவுதவிகளை அளிப்பதற்கான நடைமுறைகளையும் கோடிட்டுக் காண்பிக்கிறது.
பின்வருவோர் உள்ளடங்க, ‘அனைவருக்கும் கண்ணொளி’ சேவையின் அனைத்துப் பணியாளர்களுக்கும் ‘அனைவருக்கும் கண்ணொளி’யினது PSEAH கொள்கைகள் பொருந்தும்: நிர்வாகக் குழு இயக்குநர்கள், வேலையாட்கள், மருத்துவத் தன்னார்வத் தொண்டர்கள் (Visionaries), மருத்துவப்-பணி சாரா தன்னார்வத் தொண்டர்கள், கண்வைத்திய நாட்டு அலுவலர்கள் (Ophthalmic Country Officers), ‘சகாக்கள்’ (Fellows), திட்டப்-பங்குபற்றுநர்கள், ‘கண் மருத்த்துவப் பிரிவு இயக்குநர்கள், ஒப்பந்ததாரர்கள், நாட்டிற்குள்ளாக இருக்கும் ‘அனைவருக்கும் கண்ணொளி’ திட்டத்துடன் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் ‘அனைவருக்கும் கண்ணொளி’ திட்டத்துடன் முறைப்படியான ஒப்பந்தத் தொடர்பு உள்ள பங்குதாரர்கள்.

இந்தக் கொள்கைகள் ஆறு வழிகாட்டு நன்னெறிக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன:

கோட்பாடு 1: நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருப்பது அறவே சகித்துக்கொள்ளப்படுவதில்லை

கோட்பாடு 2: வலுவான தலைமை என்பது கலாசார மாற்றத்தின் உந்துசக்தியாக அமைகிறது

கோட்பாடு 3: பாதிப்புற்றவர்/தப்பிப் பிழைத்தவரது தேவைகளுக்கு முந்துரிமை அளிக்கப்படுகிறது

கோட்பாடு 4: PSEAH என்பது அனைவராலும் பகிரப்படும் ஒரு பொறுப்பு

கோட்பாடு 5: பாலினம் குறித்த சமமின்மை மற்றும் இதர அதிகார சமமின்மைகள் குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன

நன்னெறிக் கோட்பாடு 6: வலுவான முறையில் புகார்களைச் செய்வதென்பது பொறுப்புடைமையையும், ஒளிவு-மறைவற்ற தன்மையையும் மேம்படுத்தும்.

பின் வரும் நோக்கங்களுக்காக ‘அனைவருக்கும் கண்ணொளி’ சேவையின் கொள்கைத் திட்டம் இடம் நிறுத்தப்பட்டுள்ளது:

- பாலியல்-ரீதிச் சுரண்டல், துஷ்ப்பிரயோகம் மற்றும் தொல்லையளிப்பிற்கு எதிரான பாதுகாப்பைப் பற்றிய நடைமுறைக்கேற்ற வழிகாட்டலை அளிப்பதற்காக
- பாலியல்-ரீதிச் சுரண்டல், துஷ்ப்பிரயோகம் மற்றும் தொல்லையளிப்பு ஆகியவற்றைத் தடுப்பதற்கான ஆபத்துக்கூறு கட்டுப்பாட்டு யுக்தி ஒன்றை அளிப்பதற்காக
- ‘அனைவருக்கும் கண்ணொளி’-யின் பணியாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் அனைவரையும் நியாயமற்ற செயல்பாடுகளிலிருந்து பாதுகாப்பதற்காக
- பாலியல்-ரீதிச் சுரண்டல், துஷ்ப்பிரயோகம் மற்றும் தொல்லையளிப்பு ஆகியன இருப்பதாக சந்தேகிக்கப்படும் தருணங்களில் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றிய தெளிவான வழிகாட்டி ஒன்றை அளிப்பதற்காக

**முக்கியமான சொல்-விளக்கங்கள்**

**பாலியல்-ரீதிச் சுரண்டல்:** பாலியல் நோக்கங்களுக்காக, ஒருவருடைய பாதிப்புறும் நிலையை, அதிகாரம் செலுத்துத் திறனில் உள்ள வேறுபாட்டினை அல்லது நம்பிக்கையை உண்மையிலேயே துஷ்ப்பிரயோகம் செய்யும் அல்லது துஷ்ப்பிரயோகம் செய்ய முயற்சிக்கும் எவ்வொரு தருணமும். இன்னொருவரை பாலியல்-ரீதியாகச் சுரண்டுவதிலிருந்து பணரீதியாக, சமூகரீதியாக அல்லது அரசியல்ரீதியாக ஆதாயமடைவது இதில் உள்ளடங்கும்.

**பாலியல்-ரீதித் துஷ்ப்பிரயோகம்:** பலவந்தமாக, அல்லது அதிகார சமநிலையற்ற அல்லது வற்புறுத்து சூழல்களில் உண்மையிலேயே செய்யப்படும் அல்லது செய்யப்போவதாக **அச்சுறுத்தப்படும்** பாலியல்-ரீதியான உடல்சார் ஊடுருவல். பின்வரும் பாலியல் குற்றங்களை, ஆனால் இவை மட்டுமல்ல, இது உள்ளடக்கும்: கற்பழிப்பு முயற்சி (வாய்-வழிப் பாலுறவு கொள்ளுமாறு ஒருவரைப் பலவந்தப்படுத்த முயற்சிக்கும் தருணங்கள் இதில் உள்ளடங்கும்); மற்றும் பாலியல்-ரீதித் தாக்குதல் (சம்மதமின்றி முத்தமிடல் அல்லது தடவுதல் ஆகியவற்றை இது உள்ளடக்கும்). சட்டப்படியான சம்மதமளிப்பு வயதிற்குக் கீழ்ப்பட்ட ஒருவருடன் கொள்ளப்படும் அனைத்து பாலியல்-ரீதி நடவடிக்கைகளும் பாலியல்-ரீதித் துஷ்ப்பிரயோகமாகக் கருதப்படும்.

பாலியல்-ரீதித் தொல்லை: ஆபாசமான கருத்துகள் அல்லது பாலியல்-ரிதியான வற்புறுத்தல்களை உள்ளடக்கக்கூடிய விரும்பப்படாத உடல்ரீதியான, வார்த்தைரீதியான அல்லது வார்த்தை சார பாலியல்-ரீதி நடத்தை.

## கொள்கைத் திட்ட அமலாக்கம்

பாலியல்-ரீதிச் சுரண்டல், துஷ்ப்பிரயோகம் மற்றும் தொல்லையளிப்பு ஆகியவற்றைத் தடுப்பதற்கான ‘அனைவருக்கும் கண்ணொளி’-யின் PSEAH கொள்கைகளையும் ‘அனைவருக்கும் கண்ணொளி’-யின் முயற்சிகளையும் அமல்படுதுவதற்கான முக்கியத் தேவைப்பாடுகள் பின்வருவனவாகும்:

### ஆளெடுப்புச் செயற்பாடுகள்

வேலை இடங்களை நிரப்புவதற்காக ‘அனைவருக்கும் கண்ணொளி’ சேவையானது மிகவும் பாதுகாப்பான மற்றும் மிகவும் பொருத்தமான ஆட்களைத் தேர்ந்தெடுக்கும், மற்றும் ஏற்றுக்கொள்ளத்தகாத தீங்கினைக் குழந்தைகளுக்கு ஏற்படுத்தக்கூடிய நபர் ஒருவரை நேரடியாகவோ, மறைமுகமாகவோ தெரிந்தே வேலைக்கு அமர்த்தாது.

### பயிற்சி

‘அனைவருக்கும் கண்ணொளி’ சேவையின் நிர்வாகக் குழு இயக்குநர்கள், வேலையாட்கள், ‘தொலைநோக்கர்கள்’ (Visionaries), தன்னார்வத் தொண்டர்கள்,

கண்வைத்திய நாட்டு அலுவலர்கள் (Ophthalmic Country Officers), ‘சகாக்கள்’ (Fellows), திட்டப்-பங்குபற்றுநர்கள், ஆலோசகர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் ஆகிய அனைவரும் ‘குழந்தைப் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் பாதிப்புறும் நிலையிலுள்ளவர் நடத்தை கோட்பாடு’ எனும் ஆவணத்தின் பிரதி ஒன்றைப் பெறுவார்கள் மற்றும், அதை அவர்கள் விளங்கிக்கொண்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொண்டு அதில் கையொப்பம் இடுவார்கள்.
‘நலம் பயக்கும் குழந்தை வளர்ப்புச் செயல்பாட்டு பணிமனைகள்’ நடாத்தப்படும், மற்றும் பாலியல்-ரீதிச் சுரண்டல், துஷ்ப்பிரயோகம் மற்றும் தொல்லையளிப்பு ஆகியவற்றின் தடுப்பைப் பற்றிய விலாவரியான பகுதி ஒன்று இதில் உள்ளடங்கியிருக்கும். பொறுப்புகள், புகார் செயல்பாட்டு முறைகள், ஆபத்துக்கூறு மதிப்பீடு, தாக்கத்-தீவிரக்-குறைப்பு யுக்திகள் மற்றும் தண்டிப்புகள் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ள தலைப்புகளாகும்.

### பங்குதாரர்கள்

‘அனைவருக்கும் கண்ணொளி’ -யில் பங்குபற்றும் அனைத்து அரசு-சாரப் பங்காளர்களும் குழந்தைப் பாதுகாப்பு குறித்த அவர்களுடைய சொந்தக் கொள்கைகளைப் பின்பற்றிப் பராமரிக்கவேண்டும்.
பங்குதாரர் ஒப்பந்தங்களில் குழந்தைப் பாதுகாப்பு குறித்த அனைத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளின் தர நிலைகளும் உள்ளடக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக அரச பங்காளர்களும், ‘அனைவருக்கும் கண்ணொளி’-யினரும் இணைவாய்ச் செயலாற்றுவர். கணிசமான ஆபத்துகளைக் குழந்தைகள் எதிர்கொள்கின்றனர் என்று ‘அனைவருக்கும் கண்ணொளி’ -யை நம்ப வைக்கும் செயல்களின் காரணமாக, இது சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட அந்த பங்காளர் அமைப்புடனான ஒப்பந்தம் முறிக்கப்படும்.

### ஆபத்துக்கூறுகள் கட்டுப்பாடு

பாலியல்-ரீதிச் சுரண்டல், துஷ்ப்பிரயோகம் மற்றும் தொல்லையளிப்பு ஆகியவற்றை ஒழிப்பது ஒரு நீண்டகால முயற்சி எனும் அதே வேளையில், மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளிலும் பாலியல்-ரீதிச் சுரண்டல், துஷ்ப்பிரயோகம் மற்றும் தொல்லையளிப்பு ஆகியவற்றிற்கான ஆபத்துக்கூறுகளை மட்டுப்படுத்துவதில் ‘அனைவருக்கும் கண்ணொளி’ பற்றுறுதி கொண்டுள்ளது. ஆபத்துகளை அடையாளம் காணவும், அவற்றை மிதப்படுத்தவும், குறைக்கவும் ‘அனைவருக்கும் கண்ணொளி’ இந்த அமைப்பினையும், செயல்-திட்டங்களையும் கவனமாக நிர்வகித்துவரும்.

#### பாலியல்-ரீதிச் சுரண்டல், துஷ்ப்பிரயோகம் மற்றும் தொல்லையளிப்பு ஆகியவற்றிற்கான ஆபத்துக்கூறுகளை மதிப்பீடு செய்தல்

பாலியல்-ரீதிச் சுரண்டல், துஷ்ப்பிரயோகம் மற்றும் தொல்லையளிப்பு ஆகியவற்றிற்கான ஆபத்துக்கூறுகளை மதிப்பீடு செய்வதில் ‘அனைவருக்கும் கண்ணொளி’ சேவையானது ‘DFAT முடிவெடுப்பு வரைமுறை’ (DFAT Decision Making Framework)-யைப் பின்பற்றும். இதிலுள்ள மூன்று படி-நிலைகளாவன:

1) அலுவல் செயற்பாடுகளில் பாலியல்-ரீதிச் சுரண்டல், துஷ்ப்பிரயோகம் மற்றும் தொல்லையளிப்பு ஆகியவற்றிற்கான ஆபத்துக்கூறு ஒன்று இருக்கிறதா?
   ‘ஆம்’ என்றால்,
2) ஆபத்துக் கூறு எந்த அளவிற்கானது என்பதை மதிப்பிடுக
3) ஆபத்துக் கூறின் அளவு தீர்மானிக்கப்பட்டதும், அது குறைந்த/நடுத்தர/உயர்-நிலை/அதியுயர்-நிலை ஆகியவற்றில் எந்த வகைப்பட்டது என்பதற்கேற்ப தகுந்த குறைந்தபட்ச தர-நிலைகள் பின்பற்றப்படும்.

‘அனைவருக்கும் கண்ணொளி’-யின் அனைத்து செயல்-திட்டங்களுக்குமான இயல்-திறன் மதிப்பீட்டின் பகுதிகளாக இந்தப் படி-நிலைகள் மேற்கொள்ளப்படும்.

ஒரு செயல்-திட்டம் என்று வரும்பொழுது, அதன் துவக்க-நிலை மற்றும் கருத்துரு-நிலைகளின் ஒரு பகுதியாக ‘திட்ட ஆபத்துக்கூறு மதிப்பீடுகள்’

மேற்கொள்ளப்படுகின்றன, மற்றும் திட்டங்களைப் பற்றிய யோசனைகள் மேற்கொள்ளப்படும் பொழுதும், திட்டங்கள் வடிவமைக்கப்படும் பொழுதும் இவை மீள்மதிப்பீடு செய்யப்படுகின்றன. 'திட்ட ஆபத்துக்கூறு மதிப்பீடுக'ளில் குழந்தைப் பாதுகாப்பு ஏற்பாடுகளும், PSEAH சம்பந்தப்பட்ட ஆபத்துக்கூறுகளும், ஏற்படவல்ல ஆபத்துகளை மட்டுப்படுத்துவதற்கான அல்லது அகற்றுவதற்கான செயற்பாடுகளும், சிபாரிசுகளும் உள்ளடக்கப்படுகின்றன.

### புகார் செய்தல்

பாலியல்-ரீதிச் சுரண்டல், துஷ்ப்பிரயோகம் மற்றும் தொல்லையளிப்பு குறித்த கரிசனங்கள் மற்றும் குற்றச்சாட்டுகள் அனைத்தும் உடனடியாகப் புகார்ப்படுத்தப்பட வேண்டும். அனைத்துப் புகார்களையும் 'அனைவருக்கும் கண்ணொளி' ஏற்றுக்கொள்ளும், அத்துடன் எழுப்பப்படும் கரிசனங்களைப் பாரதூரமானதாக எடுத்துக்கொண்டு அவற்றின் மீது உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். கரிசனங்கள், பாலியல்-ரீதிச் சுரண்டல், துஷ்ப்பிரயோகம் மற்றும் தொல்லையளிப்பு குறித்த குற்றச்சாட்டுகள், ஆகியவற்றின் விசாரிப்பில் இரகசியத்தன்மை உறுதிப்படுத்தப்படுவதையும், நியாயமான நீதி குறித்த கோட்பாடுகளின் மேன்மையையும் 'அனைவருக்கும் கண்ணொளி' உறுதிப்படுத்தும். புகார் செய்பவருடைய அந்தரங்கம், யாரைப் பற்றிய தகவல்கள் வெளிப்படுத்தப்படுகின்றனவோ அவரது அந்தரங்கம் மற்றும் வெளிப்படுத்தப்படும் விடயங்களைப் பற்றிய விபரங்கள் ஆகிய அனைத்தும் பாதுகாக்கப்படும் வகையில், 'அனைவருக்கும் கண்ணொளி'-யின் 'Whistleblower Policy' ('ஆள்-காட்டிக் கொள்கை')-யில் சொல்லப்பட்டுள்ளவாறு, கரிசனங்களும் முறைப்பாடுகளும் கறாரான இரகசியத்தன்மையுடன் நடத்தப்படும்.

'அனைவருக்கும் கண்ணொளி'-யின் PSEAH கொள்கைகள், DFAT PSEAH கொள்கைகளை மீறக்கூடிய விதத்திலான கரிசனத்தை ஏற்படுத்தும் நடத்தையின் அவதானிப்பு எதுவும், அல்லது சுரண்டல், துஷ்ப்பிரயோகம் அல்லது தொல்லையளிப்பு ஆகியவற்றைப் பற்றிய தனி-நபர் ஒருவரது குற்றச்சாட்டு அல்லது தகவல்-வெளிப்படுத்துகை எதுவும் - சாட்டப்படும் நிகழ்வு அல்லது மீறல் தெரியவந்த பிறகு - இரண்டு அலுவல் நாட்களுக்குள்ளாகப் புகார்ப்படுத்தப்பட வேண்டும்.

**சட்டப்படிக் கட்டாயமான, உடனடிப் புகார்கள்** (**Mandatory and Immediate Reporting**)

பின் வருவனவற்றிற்கான குறிப்பிட்ட புகார்ப் படிவங்கள் 'அனைவருக்கும் கண்ணொளி' சேவையிடம் உள்ளன:

- 'சட்டப்படிக் கட்டாய, உடனடி வகை' (Mandatory and Immediate) - சாட்டப்படும் நிகழ்வு நடந்ததிலிருந்து 2 அலுவல் நாட்களுக்குள்ளாக புகார்கள் செய்யப்படவேண்டும்.
- 'சட்டப்படி கட்டாய வகை' (Mandatory) - சம்பந்தப்பட்ட கொள்கைகள், குறைந்தபட்ச தர-நிலை அல்லது நன்னெறிக் கோட்பாட்டு மீறல் ஆகியன தெரியவந்ததிலிருந்து 5 அலுவல் நாட்களுக்குள்ளாக புகார்கள் செய்யப்படவேண்டும்.

## அறிக்கை ஒன்றை நான் எப்படி சமர்ப்பிப்பது?

பின் வரும் வழிகளில் புகார்கள் சமர்ப்பிக்கப்படலாம்: https://sightforall.org/complaints/ எனும் வலைத்தலம் மூலம் அல்லது கீழே அட்டவணையிடப்பட்டுள்ள 'அனைவருக்கும் கண்ணொளி'-யின் பிரதிநிதிகளில் ஒருவருடன் தொடர்புகொள்வதன் மூலம்:

'அனைவருக்கும் கண்ணொளி' சேவையின் செயலாக்க அதிகாரி - jhatswell@sightforall.org
மங்கோலியா/ஸ்ரீ லங்கா/ம்யான்மார் நாட்டு அதிகாரி - myanmarcountryofficer@sightforall.org
கம்போடியா நாட்டு அதிகாரி - cambodiacountryofficer@sightforall.org
ஸ்ரீ லங்கா நாட்டு அதிகாரி - srilankacountryofficer@sightforall.org